விலை 10/=

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

03.08.2020 திங்கட்கிழமை

## முறைப்பாடுகள் 6483

கொழும்பு, ஓக.03
நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் தொடர்பாக இதுவரையில் மொத்தமாக 6 ஆயிரத்து 483 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. தேசிய தேர்தல் முறைப் பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு 1,128 முறைப்பாடுகளும்,

6

## ஒய்ந்தது பரப்புரை
## 7,452 பேர் களத்தில்

*இலங்கையின் தலைவிதி புதன்கிழமை நிர்ணயம்*



கொழும்பு, ஓக.3
நாடாளுமன்றத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் தேர்தல் பரப்புரைகள் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தன. பிரதான அரசியல் கட்சிகள் யாவும் நேற்று இறுதிக் கட்டப் பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டன. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியின்கீழ் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி ஜனாதிபதி கோத்தாபய , பிரதமர் மஹிந்த மற்றும் பொதுஜன முன்னணியின் ஸ்தாபகர்

6

## புதினம் தெரியுமோ?

என்னதான் வெளியில் சிரித்தபடி காட்டிக்கொண்டாலும், ஒரே கட்சியில் இருந்தாலும், ஒவ்வொரு வேட்பாளரும் சக வேட்பாளரின் முதுகில் குத்தியாவது தம்முடைய வெற்றியை உறுதி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். இலட்சியம், கொள்கை, தேசியம் என்றெல்லாம் பேசிக்கொள்ளும் ஒரு தமிழ்க்கட்சியின் இளைய வேட்பாளர்கள் இருவரிடையே தொடர்ச்சியாக நிலவிய முறுகல் நிலை பகிரங்கமாகத் தெரிய வந்த போது, அதை இரு தரப்பினரும்

6

## அடிவருடிகளை நிராகரித்து
# மீண்டுமொருமுறை தமிழர்கள் கோத்தாவை விரட்டுவார்கள்

*சரவணபவன் நம்பிக்கை*



யாழ்ப்பாணம், ஓக. 3
**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களிடம் அடி வாங்கிய கோத்தாபய ராஜபக்ச, தனது ஏவலாளிகளான அங்கஜன், டக்ளஸ், சந்திரகுமார் போன்றோரை இந்தத் தேர்தலில் களமிறக்கியுள்ளார். அதனை விட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளைச் சிதறடித்து, அங்கஜன், டக்ளஸ், சந்திரகுமார் ஆகியோரின் வெற்றியை உறுதிப்படுத்த விக்னேஸ்வரன் அணியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் களமிறங்கியுள்ளது. இந்தச் சூழலில், தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் ஊடாக, கோத்தாபயவை நிராகரிக்க முடியும். அவரை மீண்டும் ஒரு தடவை அடித்து விரட்ட முடியும்.**

6

## வாக்குப் பெட்டிகளின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 3
நாடாளுமன்றத் தேர்தலுக்காக வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லும் போது கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனரத்ன தெரிவித்துள்ளார். அத்துடன் இன்று முதல் தேர்தல் கடமைகள் முடியும் வரை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகள் நாடு முழுவதும் இருக்கும் என்று எஸ்.எஸ்.பி சேனரத்ன மேலும் கூறினார். (அ)

## வவுனியாவில் விபத்து முதியவர் உயிரிழப்பு

வவுனியா,ஓக.3
வவுனியா ஓமந்தை பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சைபலனின்றி நேற்றுச் சாவடைந்தார். சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த மேகவண்ணன் (வயது 62) என்ற முதியவரே சாவடைந்துள்ளார்.

6

## உங்கள் தெரிவு 'தமிழரசு' உங்கள் சின்னம் 'வீடு'

*ஓரணியில் திரண்டு வாக்களியுங்கள்*
*மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், ஓக. 3
"தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தலாக எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் அமைகின்றது. எனவே, அன்றைய தினம் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு வாக்களிக்க வேண்டும். வாக்குச் சீட்டில் உங்கள் தெரிவு இலங்கைத்

8

## முழுமையான தனிமைப்படுத்தலே கொரோனாவைக் கட்டுப்படுத்தும்!

கொழும்பு, ஓக. 3
எதிர்காலத்தில் கொரோனா போன்ற பெருந்தொற்று நோய்களை எதிர்கொள்வதற்கு முழுமையானதொரு தனிமைப்படுத்தல் மையம் அவசியமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அந்த அமைச்சு இவ்வாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளதாவது:

6

## சுதந்திரமான தேர்தலுக்கு சகலரும் ஒத்துழையுங்கள்

ஆணையாளர் தேசப்பிரிய வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 3
"எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் சுதந்திரமாக நீதியாக நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்." இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய

6

## பொலிஸ் பிடியிலிருந்து தப்பியோடியது பூனை

கொழும்பு, ஓக.3



கொழும்பு, மெகசின் சிறைச்சாலைக்கு போதைப்பொருள் கொண்டு சென்ற நிலையில் கண்டுபிடிக் கப்பட்ட பூனை காணா மற்போயுள்ளது என்று சிறைச்சாலை தகவல் வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

நேற்று முன்தினம் மெகசின் சிறைசாலைக்கு அருகில் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் பொறுப்பில் எடுக்கப்பட்ட பூனையே இவ்வாறு காணாமல் போயுள் ளது. பூனையின் கழுத்தில் இருந்து 1.1 கிராம் ஹெரோய்ன், இரண்டு சிம் அட்டை கள் மற்றும் மெமரி காட் ஆகியவற்றையும் சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ள னர். இந்த பூனை மூலம் எந்த கைதிக்கு ஹெரோய்ன் அனுப்ப முயற்சிக்கப்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. அறையொன்றில் பாது காப்பாக அடைக்கப்பட்ட பூனை காணா மற் போயுள்ளது எனச் சிறைச்சாலை தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ரி1)



## எதிர்வரும் காலங்களில் வாகனங்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஓக.3

எதிர்வரும் காலங்களில் நாட்டில் வாக னங்களுக்கான பற்றாக்குறை ஏற்படக்கூடு மென வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அரசாங்கம் இறக்கும தியில் மேற்கொண்டுள்ள கட்டுப்பா டுகளை அடுத்தே வாகனங்களுக்கான பற்றாக்குறை ஏற்படும் நிலை உருவாகியுள் ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் அதிகளவில் விற்பனையாகும் வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதுடன், தற்போது வாகனங்கள் இல்லையெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி3)

## போதைப்பொருளுடன் நால்வர் கைது

கொழும்பு, ஓக.3

கஞ்சாவுடன் 25 வயதுடைய இளைஞர் ஒருவரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர். மஸ்கெலியா பிரவுண்லோ தோட்டத்தைச் சேர்ந்த நபரிடமிருந்து 2 கிராம் 150 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட் டுள்ளது. இதேவேளை மஸ்கெலியா பொலி ஸார் கிராப்பு தோட்டப் பகுதியில் மேற் கொண்ட சுற்றிவளைப்பில் போதைப்பொ ருள் வைத்திருந்த மூவர் கைதுசெய்யப்பட் டுள்ளனர். 530 மில்லிகிராம், 520 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் இருவ ரும் கஞ்சா சுருட்டுடன் ஒருவரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மஸ்கெ லியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ரி1)

### நாடு முழுவதும்
# மஞ்சளின் தரம் பரிசோதனை!



கொழும்பு, ஓக.3

சந்தைகளில் உள்ள மஞ்ச ளின் தரத்தைப் பரிசோதிப்ப தற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையில், மஞ்சளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில், வர்ணங்கள் மற் றும் மா வகைகளைக் கலந்து மஞ்சள் விற்பனை செய்யப் படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையை அடிப்படையாகக்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெ டுக்கப்படவுள்ளது. இதன டிப்படையில், நாடு முழுவ திலும் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 15 மஞ்சள் தூள் மாதிரிகள் இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப் பட்டுள்ளன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் அதிக விலைக்கு மஞ்சளை விற்பனை செய் வோருக்கு எதிரான சுற்றிவளைப்பு நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மையுடன், இதுவரை அதிக விலைக்கு மஞ்சளை விற்பனை செய்த 70 இற்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வும் நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (ரி3)

## தெமட்டகொட சமிந்தவின் சகா கொனா ஷாந்த கைது

போதைப்பொருள் வர்த்தகரான தெமட்டகொட சமிந்த வின் நெருங்கிய நண்பர் எனக் கருதப்படும் கொனா ஷாந்த எனப்படுபவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமையவே 30 வயதுடைய கொனா ஷாந்த, மாவத்தைப் பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். இவ் வாறு கைதுசெய்யப்பட்ட நபர் கொழும்பு 15 ஐச் சேர்ந்த வர் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ரி1)



## காதலன் முன் காதலி துஷ்பிரயோகம்; சந்தேகநபர் கைது

பாணந்துறை, ஓக.3

பாணந்துறை, பின்வத்தை கடற்கரையில் காதலன் முன்னி லையில் காதலியை துஷ்பிரயோ கம் செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

பொலிஸாரின் தீவிர முயற்சியில் பிரதான சந்தேகநபர் வாதுவ வடக்கு தலப்பிட்டிய பிரதே சத்தில் நேற்று கைது செய்யப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரி டம் இருந்து இரண்டு கத்திக ளும் கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை 17 வயதுடைய காதல் ஜோடி கடற்கரைக்குச் சென்றுள்ளனர். அங்கு வந்த சந்தேகநபர் முதலில் இந்த ஜோடியை அச்சுறுத்தி பணத்தை அபகரித்துள்ளார். பின்னர் காதலனுக்கு கத்தியை காட்டி மரண அச்சுத்தல் விடுத்து அவருக்கு முன்னாலேயே காதலியை துஷ்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள் ளார். சம்பவம் தொடர்பில் தீவிரமாக விசாரணை மேற் கொண்ட பொலிஸார், சந்தேகநப ரைக் கைது செய்துள்ளனர். (ரி1)

## கித்துல் கள் அருந்திய 17வயது மாணவர் மருத்துவமனையில்!

பதுளை, ஓக.3

கித்துல் கள் அருந்திய பாடசாலை மாணவர் ஒருவர் அந்தக் கள் நஞ்சாகியமையால் ஆபத்தான நிலை யில் இன்று காலை மீகஹகிவுல மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

அந்த மாணவருக்கு அவரது நண் பர் ஒருவர் கள் வழங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள் ளன. கம்பத பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் 17 வயது மாணவர் ஒருவரே இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். கள் அருந்தியதன் பின்னர் சிறிது நேரத்தில் இரத்த வாந்தி ஏற்பட்டதாகவும், இதனை யடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனவும் தெரி விக்கப்படுகிறது. (ரி3)

## அரச மீன்கூட்டுத்தாபனத்தின் அருகில் சுகாதாரச் சீர்கேடு; மக்கள் பாதிப்பு

ஹற்றன், ஓக.3

ஹற்றன் பஸ் தரிப்பிட பகுதிக்கு பின்பகுதியில் உள்ள அரசமீன் கூட்டுத்தாபனத்தின் அருகில் உள்ள சகல வர்த்தக நிலையப் பகுதியில் கழிவு நீர் வடிந்து செல்வதாலும் குப்பைகளைச் சேமித்து வைப்பதாலும் பெரும் சுகாதார சீர் கேடு நிலவி வருகின்றது என அப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது மலையக பகுதியில் நிலவி வரும் காலநிலை மாற்றத்தால் அதிகமான கழிவு நீர் வெளியேறுவது டன் அப்பகு தியில் துர்நாற்றம் வீசுவதால் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகிறோம் எனவும் பொதுமக் கள் குற்றஞ்சாட்டு கின்றனர். ஹற்றன் டிக்கோயா நகர சபை இந்த விடயத்தில் பொறுப்பற்றுச் செயற்ப டுகின்றது என விசனம் தெரிவித்துள்ள மக்கள், நகர சபை இப் பிரச்சினையைத் தீர்த்து வடிகால்களை மீள்பரி சிலனை செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ரி1)

# கூட்டமைப்புக்குள் உடைவில்லை மக்கள் அதை உணர்த்துவார்கள்

## கிட்டுப் பூங்காவில் சரவணபவன் முழக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி கிடைக்காதனாலேயே நீதியரசர் விக்னேஸ்வரன் தனித்துச் சென்று கட்சி ஒன்றை ஆரம்பித்தார். கட்சியை உடைக்க நினைத்தார். ஆனால், கட்சி உடைந்துள்ளதா, இல்லையா என்பதை மக்கள் இந்தத் தேர்தலில் உணர்த்துவார்கள். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப் பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

யாழ். நல்லூர், கிட்டுப் பூங்காவில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்புக்கு ஐந்து ஆசனங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளன. ஆறாவது ஆசனமும் கிடைக்கக்கூடிய கள நிலைவரம் காணப்படுகின்றது. யாழ். தேர்தல் மாவட்டத்தில் 330



வேட்பாளர்களில் அரைவாசி வேட்பாளர்கள் அரசின் பிரதிநிதிகள். உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் எல்லாவிதமான கௌரவத் தையும் இழந்து எல்லோரையும் விமர்சித்து வருகிறார். இறுதியாகக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்ஷவுடன் டீல் வைத்துள்ளதாக விக்னேஸ்வரன் கூறுகின்றார். தான் என்ன செய்யப் போகின்றேன் என்பதைப் பற்றிப் பேசாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது பிழை பிடித்துக் கொண்டு அதனை வைத்து அரசியல் செய்து வருகின்றார்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக வெற்றி பெற்ற போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முன்னிலையில் பதவி ஏற்பார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவர் தனது சம்பந்தி வாசுதேவ நாணயக்காரவுடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னால் பதவியேற்றார். முதலமைச்சராக பதவியேற்றதில் இருந்து தானே கூட்டமைப்பின் தலைவர் என நினைத்தார். அதனாலேயே கூட்டமைப்பின் தலைமையிடம் சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளவில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி ஒரு பரம்பரைக்கட்சி. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைவராக இருந்தார். அதன் பின் குமார் பொன்னம்பலம் தலைவர், தொடர்ந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைவராக இருக்கிறார். அந்தக் கட்சியில் சாதாரண பொது மகனுக்குத் தலைமைத்துவம் கிடைக்காது. இதனாலேயே விக்னேஸ்வரன் அவர்களோடு இணையாமல் புதிய கட்சியைத் தொடங்கினார். கூட்டமைப்பின் தலைமைப் பதவி கிடைக்கவில்லை என்றதும் கட்சியை உடைக்க நினைத்தார். கூட்டமைப்பு உடைந்துள்ளதா, இல்லையா என்பதை மக்கள் இந்தத் தேர்தலில் உணர்த்துவார்கள்.

அரசுக்குத் தமது கட்சியில் இருந்து வடக்கு, கிழக்கில் தேசியப்பட்டியல் இன்றி நேரடியாக தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தேவைப் படுகின்றனர். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து தங்களை அங்கீகரித்துள்ளனர் என சர்வதேசத்திற்கு அரசு காட்ட முயல்கின்றது. அதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களை வெற்றிபெற வைக்க ஜனாதிபதி பணத்தை வாரி இறைக்கின்றார்.

கடந்த காலங்களில் இருந்த டக்ளஸ் தேவானந்தாவினுடைய அடாவடிகளை விட தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடாவடி அதிகரித்துள்ளது. சுதந்திரக் கட்சிக்கு விழும் வாக்குகள் கோத்தாபயவுக் கான வாக்குகளாக அமைந்துவிடும். எனவே எமது இளைஞர், யுவதிகள் விழிப்படைய வேண்டும்.

கடந்த காலங்களில் கூட்டமைப்பு பலம்வாய்ந்த அமைப்பாக இருந்ததால்தான் நாம் பலவற்றைச் சாதித்தோம். பல மில்லியன் கணக்கான அபிவிருத்தியை மேற்கோண்டோம். நீண்டகாலமாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் காணிகளை விடுவித்தோம். எமது பணிகளை தொடர எமக்குத் தொடர்ந்தும் ஆணை தாருங்கள்- என்றார். (ஓ,5,22)

# வாக்குரிமையை புறக்கணித்தால் ஏகாதிபத்திய யுகமே தோன்றும்

## ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஓக 3

நாட்டு மக்கள் தமது வாக்குரிமையைப் புறக்கணித்தால் அல்லது உபயோகிக்கத் தவறினால் மீண்டும் ஏகாதிபத்திய யுகத்துக்கே செல்ல வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார். நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'இன்று நாம் அனைவரும் எதிர்காலம் பற்றிய பயத்தில் இருக்கின்றோம். எதிர்காலம் பற்றி எதிர்பார்ப்பின்றி இருக்கின்றோம். இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கை அற்றுப் போயுள்ளது. கொவிட்19 க்கு பின்னர் எமக்கு என்ன ஆகும் என்ற கேள்வி எழுந்துள்ளது. அனைத்துத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. தொழில் வாய்ப்புக்கள் அற்றுப் போயுள்ளன.



இவ்வாறான நிலைமைக்குள் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. எமது நாட்டு பொருளாதாரத்தில் அந்நிய செலாவணி முக்கிய இடம் வகிக்கின்றது. ஆனால் இவ்வருடம் ஒரு சதமேனும் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. மிகவும் நெருக்கடியான நிலைமையிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சிறு வியாபாரிகளானாலும் பெரியவர்களாயினும் எவரிடமும் தற்போது பணப்பரிமாற்றம் இல்லை. கோத்தாபய ராஜபக்ஷ அனைத்தையும் சரியாக்குவார் என்று மக்கள் நம்பினர். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கள் எதுவும் நிறைவேறவில்லை. அவற்றை செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று கோருகின்றனர். தொழிற்சாலையொன்றை திறப்பதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமா ? நாட்டு மக்கள் தமது வாக்குரிமையை உபயோகிக்க வேண்டும். அது அனைவரதும் அடிப்படை உரிமையாகும்.

நாட்டின் எதிர்காலத்தை மாத்திரமல்ல. அனைவரதும் எதிர்காலத்தையும் மக்களின் வாக்குகளே தீர்மானிக்கின்றன. வாக்குரிமையை உபயோகிக்கத் தவறினால் அல்லது புறக்கணித்தால் ஏகாதிபத்திய யுகத்திற்கே மீண்டும் செல்ல வேண்டியேற்படும். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சியே உங்கள் கண் முன் தோன்றும் என்றார். (ஐ)

# பலமான எதிர்க்கட்சி நாட்டில் கிடையாது

## முன்னாள் எம்.பி. விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஓக.3

நல்லாட்சி அரசாங்கத்தில் நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டவர்களையும், தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்தியவர்களையும் மக்கள் ஜனநாயக ரீதியில் புறக்கணிக்க வேண்டும். ஆளும் தரப்புக்குச் சவால் விடுக்கும் பலமான எதிர்க்கட்சி ஒன்று நடைமுறையில் கிடையாது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்..

அவர் மேலும் தெரிவித்ததாவது;

'நாட்டையும், தேசிய வளங்களையும் பாதுகாப்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். ஜனாதிபதியின் கொள்கைத்திட்டங்களை 69 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஜனாதிபதியின் கொள்கைத்திட்டம் முழுமைப்படுத்தப்படவேண்டும். பொதுத்தேர்தலின் வெற்றியை இலக்காகக் கொண்டு பிரதான அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரங்கள் கடந்த ஒரு மாத காலமாக இடம் பெற்றன. ஆளும் தரப்பிற்கு அதாவது பொதுஜன பெரமுனவிற்கு சவால் விடுக்கும் எதிர்க்கட்சி ஒன்று நடைமுறையில் காணப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சக்தியினதும் போட்டி சிறு கொதாவை மையப்படுத்தியதாக அமைந்தது எங்களின் போட்டி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதை இலக்குப்படுத்தியதாக அமைந்தது. இடம் பெறவுள்ள பொதுத்தேர்தல் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விதமாக உள்ளது. சர்வதேச மற்றும் உள்ளக ரீதியில் பல சவால்களை நாம் எதிர்கொண்டுள்ளோம். அனைத்து நெருக்கடிகளுக்கும் தீர்வு காண நல்லாட்சி அரசாங்கத்தைப் போலல்லாது பலமான நிலையான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் -என்றார். (ஐ)

# எம் இறுதி நம்பிக்கை தமிழ்க் கூட்டமைப்பே!

## முன்னாள் போராளி செழியன் முழக்கம்

*யாழ்ப்பாணம், ஒக. 3*

வெறும் சிங்கள இராணுவத்தால் எம்மை அழிக்க முடியவில்லை. 22 நாடுகள் இணைந்துதான் எம்மை வீழ்த்தின. முள்ளி வாய்க்காலில் நாம் அழிக்கப்படும் வேளையில் எமது இறுதி நம்பிக்கையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருந்தது.- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் போராளியான செழியன்.

கைதடி - குமாரபுரத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயுத ரீதியாக நாம் பலத்தை இழந்தோம். தலைவனின் இறுதிப் போராளி வீழ்த்தப்படுகின்ற போதும்கூட அனைவரினதும் நம்பிக்கை கூட்டமைப்பாகத்தான் இருந்தது. ஆயுத ரீதியாக நாம் வீழ்த்தப்பட்டோம், ஆனால் ஜனநாயக ரீதியாக தொடர்ந்து போராடலாம் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது. இன்று பல கட்சிகள் இங்கு வாக்குக் கேட்கின்றன. பல கட்சிகளும் ஜனநாயம், தேசியம், உரிமை என்றெல்லாம் சொல்லுகின்றன. இன்னும் சில கட்சிகள் உங்கள் தலைவனை தமது தலைவனாகக் கொண்டு பேசுகின்றன. இந்தக் கட்சிகளை நம்பாதீர்கள். இவர்கள் உணர்ச்சியால் தமிழர்கள் இருப்பை நீர்த்துப் போகச் செய்யவுள்ளனர்.

இளைஞர்கள் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். ஆனால் வேதனை என்னவென்றால் இன்று இளைஞர்கள் சிலர் தேசியக் கட்சிகளின் அற்பசொற்பச் சலுகைகளுக்காக அந்தக் கட்சிகளின் பரப்புரைச் சீட்டுக்களை காவிக் கொண்டு காவித் திரிகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும்தான் தமிழர்களின் இருப்பை உறுதி செய்யும். தலைவர் கூட்டமைப்பை வலுப்படுத்தவே சொன்னார். மலினப்படுத்தச் சொல்லவில்லை. ஆனால் கூட்டமைப்புக்குள் உங்களுக்குப் பிடிக்காதவர்கள் இருக்கலாம். அவர்களை நிராகரியுங்கள். நீங்கள் விரும்புகின்றவர்களை வெற்றிபெற வையுங்கள். ஆனால் அவர்கள் கூட்டமைப்பின் வேட்பாளர்களாக இருக்க வேண்டும். எம்மைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோரின் முகத்தில் கரியைப் பூசுங்கள். மாண்டு போன மாவீரர்களின் கனவு தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதுதான். அதை மக்கள் நிறைவேற்ற வேண்டும்- என்றார். (ம)



# இராணுவத்தினர் உடனிருந்தால் சுதந்திரமான தேர்தல் நடக்காது

## வேட்பாளர் சிவமோகன் வலியுறுத்தல்

*முல்லைத்தீவு, ஒக. 3*

இன்று (நேற்று) நள்ளிரவு 12 மணியுடன் இராணுவத்தினர் முகாம்களுக்கு செல்லவில்லையாயின் சுதந்திரமான தேர்தல் இடம்பெறாது என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சிவமோகன்.

வவுனியா விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ராஜபக்ச அவசர அவசரமாக இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு நாடாளுமன்ற சட்ட ஆட்சியை உருக்குலைத்தமையினால் இந்த அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டவேண்டிய நிலை வந்துவிட்டது. அதுவே ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல்.

இந்த தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்றத்தில் பிரச்சினையொன்று வெளிவரவுள்ளது. இதுவரை காலமும் தனது ஜனாதிபதி அதிகாரத்தை வைத்துக்கொண்டு நடத்திவந்த அராஜக ஆட்சிக்கு எதிராக நாடாளுமன்றம் குரல் கொடுக்கும். இராணுவத்தினர் இன்று (நேற்று) 12 மணியுடன் அவர்களது முகாம்களில் அடைக்கப்பட வேண்டும். அவ்வாறு நடக்காதவிடத்து சுதந்திரமான தேர்தல் நடைபெறாது என்பதனை கூறிக்கொள்கின்றேன்- என்றார். (ம-110)

# வளங்களை பிற நாட்டவருக்கு வழங்கும் எண்ணம் எமக்கில்லை

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

*அம்பாந்தோட்டை, ஒக.3*



தேசிய வளங்களை பிற நாட்டவருக்கு தாரைவார்க்கும் கொள்கை எமக்கு கிடையாது. எதிர்கால தலைமுறையினருக்காக தேசிய வளங்கள் பாதுகாக்கப்படும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றவர்களையும் அதற்கு துணை நின்றவர்களையும் இம்முறை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டாம். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு வாக்குரிமையை முறையாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை ஹுங்கம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன தலைமையிலான புதிய அரசாங்கத்தில் சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் மாத கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என்று எதிர்த் தரப்பினர் அரசியல் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்.

மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை ஒருபோதும் நாங்கள் இல்லாதொழிக்கமாட்டோம். தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு தாரைவார்க்கும் கொள்கை எமக்கு கிடையாது.

கடந்த அரசாங்கம் தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கு எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. அரசியல் தேவைகளுக்காக தேசிய வளங்கள் பிற நாட்டவர்களுக்கு தாரைவார்த்தனர். தேசிய வளங்களை விற்கப்படும் போது அதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் தைரியமாக எதிர்ப்புத் தெரிவிக்கும் நபருக்கு அதிகாரத்தை வழங்குங்கள்.

ஜனாதிபதியுடன் இணக்கமாக செயற்படும் அமைச்சரவை அமைய வேண்டும். முரண்பாடற்ற அரசாங்கம் அமைந்தால் மாத்திரமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். ஆகையால் பொதுஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்குங்கள் -என்றார்.(ஐ)



# வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவேன்

## சஜித் ஆணித்தரம்

*கொழும்பு, ஜூலை 3*

பொதுத் தேர்தலுக்காக வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவேன் என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின்போதே இவ்வாறு தெரிவித்தார் அவர். சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கி வருகின்றது. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசால் எந்த நிவாரணமும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின ஆட்சியில் நாளாந்தம் ஊதியம் பெறுபவர்கள், நிரந்தர வருமானம் இன்றி இருப்பவர்கள், வாழ்வாதார பிரச்சினையை எதிர்நோக்கி வரும் சாதாரண மக்கள் என அனைவரும் தங்களது பொருளாதாரத்தை சீர் செய்து கொள்வதற்காக 20 ஆயிரம் ரூபா பணத்தை வழங்குவோம்.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்த காலகட்டத்தில் அதிகமான மின்பாவனையினால், அதிகரிக்கப்பட்ட மார்ச் மற்றும் ஏப்பரல் மாதத்திற்கான மின் கட்டணங்களை செலுத்திவர்களின், கட்டணத்தொகையை எமது ஆட்சியில் மீளக்கொடுப்போம்.

அதுமட்டுமன்றி நாங்கள் ஆட்சியை கைப்பற்றி 24 மணித்தியாலத்திற்குள் எரிபொருளின் விலையை குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம)



# வாக்களிப்பு நிலையங்களை சுத்திகரிக்கும் பணி மட்டக்களப்பில் மும்முரம்

மட்டக்களப்பு, ஓக.3

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கொரோனா வைரஸ் பாதுகாப்புக் கருதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு இரசாயனத் திரவம் தெளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில், கோறளைப்பற்று மத்தி, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலக பிரிவில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கே இந்த இரசாயனத் திரவம் தெளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் மக்களின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் நோய் காரணமாக வாக்காளர்களின் நன்மை கருதி சுகாதார விதிமுறைகளைப் பேணி இத் தேர்தலை நடத்த சகல ஏற்பாடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பூர்த்தியாகியுள்ளன.

இத் தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியில் 194 வாக்கெடுப்பு நிலையங்களும், கல்குடா தொகுதியில் 119 வாக்கெடுப்பு நிலையங்களும், பட்டிருப்புத் தொகுதியில் 115 வாக்கெடுப்பு நிலையங்களுமாக மொத்தம் 428 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2-150)

# இளைஞர் அபிவிருத்திகளுக்காக 35 ஏக்கர் காணி கையளிப்பு

திருகோணமலை, ஓக.3

திருகோணமலை மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 35 ஏக்கர் காணி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கையளிக்கப்பட்டது.

இந்தக் காணி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகமும், தலைவருமான திஸார ஜெயசிங்கவினால் இன்று உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இது குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில், திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கும்புறுப்பிட்டி பகுதியில் 1984 ஆம் ஆண்டு இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு சொந்தமான காணிகள் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக தனியாருக்குச் சொந்தமாக்கப்பட்டு ஆதரவற்ற நிலையில் காணப்பட்டன. அந்தக் காணிகளில் 35 ஏக்கர் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக இளைஞர் விவசாயம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டன. இக்காணியினூடாக சுற்றுலாத்துறை மற்றும் விவசாயத் துறையை மேம்படுத்துவதுடன் சர்வதேச சர்வதேச இளைஞர் அபிவிருத்தி வலையம் ஒன்றை உருவாக்க உள்ளோம் என அவர் தெரிவித்தார். (ரி1)



## வாழைச்சேனை ஆலை மீண்டும் புத்துயிர்

# உள்ளூர் காகித உற்பத்திகள் விற்பனைக்கு அனுப்பி வைப்பு

மட்டக்களப்பு, ஓக.3

கடதாசிகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதையடுத்து உள்ளூர் உற்பத்திகளுக்கு போதியளவு சந்தைவாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனால் 2014 ஆம் ஆண்டு வாழைச்சேனை காகித ஆலையின் உற்பத்திகள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டன.

இதனால், 2016 ஆம் ஆண்டு சுயவிருப்பின் பேரில் பலர் இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டு ஓய்வுபெற்றனர். தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்ததையடுத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் விசேட திட்டத்திற்கமைவாக கடதாசி ஆலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இந்த நிலையில், கடந்த ஆறு வருட காலத்தின் பின்னர், மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள வாழைச்சேனை காகித



ஆலையின் முதலாவது தொகுதி உற்பத்திகள் விற்பனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது, சுமார் நாற்பது தொன் எடையுள்ள கனமான கடதாசி, லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக ஆலையின் உதவி முகாமையாளர் சபாபதிப்பிள்ளை அம்பிகாவதி தெரிவித்துள்ளார். (ரி2-150)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலய 10 ஆம் நாள் திருவிழாவான இன்று திங்கட்கிழமை நடைபெற்ற காலை நேர உற்சவத்தின் பதிவுகள்.(ஐ)

# நாடு முழுவதும் 'பார்'கள் பூட்டு

கொழும்பு ,ஓக.3

நாளை மற்றும் நாளை மறுதினம் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படவுள்ளன. பொதுத் தேர்தல் வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணும் பணிகளை முன்னிட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை மதுவரித் திணைக்களம் விடுத்துள்ள விசேட அறிவித்தலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# வவுனியாவில் எழுத்துப் பட்டறை நிகழ்வு

வவுனியா.ஓக.3

எழுத்துப் பட்டறை நிகழ்வு ஒன்று, சுயாதீனத் தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில், வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள சமூக சேவைத் திணைக்கள அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தப் பட்டறை, எழுதும் படைப்பாளிகளுக்கான பயிற்சி நெறியுடன், ஈழத்திலிருந்து தரமான கலைப் படைப்புகளை வெளிக்கொணரும் முயற்சியிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில், எழுத்துத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2-110)



# மீண்டுமொருமுறை...

இவ்வாறு தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும்
கிளிநொச்சி மாவட்டங்களின்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
சுன்னாகத்தில் நேற்று இரவு இடம்
பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில்
உரையாற்றுகையிலேயே மேற்கண்ட
வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்க
ளின் உரிமைகளை எந்தவொரு சந்தர்ப்
பத்திலும் அடைவு வைக்கவில்லை.
கூட்டமைப்பினர் தங்களுக்கான
சலுகைகளைப் பெற்றுக்கொள்ளவும்
இல்லை. ஆனால், விக்னேஸ்வரன்
மற்றும் கஜேந்திரகுமார் தரப்புக்கள்
தொடர்ச்சியாக கூட்டமைப்பு மீது
இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி
வருகின்றனர்.

நாங்கள் தமிழரின் உரிமைகளை
அடைவு வைத்திருந்தால், இன்று
அமைச்சுப் பதவிகளுடன் பகட்டாக
இருந்திருக்க முடியும். ஆனால் நாங்கள்
அப்படிச் செய்யவும் மாட்டோம்.
செய்யப்போவதுமில்லை. தமிழ்
மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்
வரையில் அமைச்சுப் பதவி என்பதை
நினைத்தும்கூட பார்க்க மாட்டோம். எமது
கட்சியின் தலைவர் இதைத் தெட்டத்
தெளிவாகவே எடுத்துரைத்திருக்கின்றார்.
தமிழ் மக்களின் நலனுக்காக, அபிவிருத்
திக்காக, வாழ்வாதாரத்துக்காக எந்த
வொரு எதிர்பார்ப்பும் இல்லாமல்
நாங்கள் கடந்த காலங்களில் பணியாற்
றியிருக்கின்றோம். சிங்கள அரசுக
ளுக்கு நாங்கள் முட்டுக் கொடுக்க
வில்லை. எந்த அரசை தமிழ் மக்கள்
விரட்டியடித்தீர்களோ அந்த அரசு
மீண்டும் ஆட்சிக்கு வரக் கூடாது
என்பதற்கான ஆதரவை வழங்கினோம்.
நாங்கள் அந்த ஆதரவை வழங்கத் தவறி
யிருந்தால், ராஜபக்சக்கள் எப்போதோ
ஆட்சிக்கு வந்திருந்தால் இன்று தமிழ்
மக்கள் இந்தத் தீவிலிருந்து புலம்
பெயரத் தொடங்கியிருப்பார்கள்.

இப்போதும் இந்த ராஜபக்சக்களின்
ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுக்
கின்ற ஒரேயொரு தமிழ்க் கட்சியாக
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்தி
ரமே இருக்கின்றது. விக்னேஸ்வரன்
தரப்போ, கஜேந்திரகுமார் தரப்போ
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்
தாபயவை எதிர்க்கத் திராணியற்று ஓடி
ஒளிந்தவர்களே.

மறுபுறம் டக்ளஸ், அங்கஜன், சந்திரகு
மார் போன்றோர், தமிழ் மக்களின்
வாக்குகளைப் பெற்று கோத்தாபய
வுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப்
பெற்றுக் கொடுக்கக் காத்திருக்கின்ற
னர். தமிழ் மக்கள் கோத்தாபயவை
ஏற்றுக்கொள்ளப்போகின்றார்களா? 10
மாதங்களுக்கு முன்னர் மரண அடி
கொடுத்து தோற்கடித்த அதே கோத்தா
பயவை இந்த நாடாளுமன்றத் தேர்த
லில் நாங்கள் அங்கீகரிக்கப் போகின்
றோமா?

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத்
தேர்தலில் தமிழ்த் தேசியக்
கூட்டமைப்புக்கு 7 வாக்குகளால்
6ஆவது ஆசனம் நழுவிப் போனது.
இந்தக் கைங்கரியத்தை தமிழ்த் தேசிய
மக்கள் முன்னணியே செய்தது. அவர்
கள் தாங்களும் ஆசனம் பெற்றுக்
கொள்ளாமல், கூட்டமைப்பின்
ஆசனத்தை சிங்களப் பேரினவாதக்
கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு
தாரைவார்த்தனர்.

இப்போதும், கஜேந்திரகுமார் அணி
யும், விக்னேஸ்வரன் அணியும் ஓர்
ஆசனத்தை கைப்பற்றுவதற்கு தேவை
யான முழுமையான வாக்கு எண்ணிக்
கையைப் பெற மாட்டார்கள். ஆனால்
கூட்டமைப்பின் வாக்குகளைப் பிரித்
தெடுத்து, டக்ளஸூம், அங்கஜனும்,
சந்திரகுமாரும் வெற்றி பெறுவதற்கு
உதவப் போகின்றார்கள். இந்த
ஆபத்தை உணர்ந்து, கூட்டமைப்பை
பெரு வெற்றியடையச் செய்யவேண்
டும் -என்றார். (ஒ,5)

# ஓய்ந்தது பரப்புரை...

பஸில்ஆகியோர் மும்முனைகளில் பரப்புரைகளை முன்னெடுத்திருந்தனர்.
பொதுஜன முன்னணியின் நேற்றைய இறுதிப் பரப்புரைக் கூட்டங்கள் அம்
பாந்தோட்டை, கொழும்பு, குருநாகல் மாவட்டங்களை மையப்படுத்தி
நடைபெற்றன.

மறுபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையி
லான அணியும் இறுதிக்கட்ட பரப்புரையில் தீவிரமாக ஈடுபட்டது. வடக்கு,
கிழக்கு, மலையக, தென் பகுதியென அனைத்துப் பிரதேசங்களிலும் பரப்பு
ரைக் கூட்டங்களில் கலந்துகொண்டிருந்த அவர், நேற்று கொழும்பில் இறுதிப்
பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அதேபோன்று ஐக்கிய தேசியக்
கட்சியின் இறுதிப் பரப்புரைக் கூட்டமும் அந்தக்கட்சியின் தலைவர் ரணில்
விக்கிரமசிங்க தலைமையில் மத்திய கொழும்பில் நேற்று நடைபெற்றது.
அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்
டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்
முற்போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா
முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட இதர
கட்சிகளும் வெற்றி இலக்கை அடைவதற்காக இறுதிக்கட்டப் பரப்புரைகளில்
நேற்று ஈடுபட்டன.

இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த
நாடாளுமன்றத் தேர்தல் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.
இந்தத் தேர்தலில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக
அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 03 ஆயிரத்து 682 பேரும்,
சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 03 ஆயிரத்து 800 பேருமாக மொத்தம் 07
ஆயிரத்து 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 874 பேர் வாக்களிப்பதற்கு தகுதிப்
பெற்றுள்ளனர். பொதுத் தேர்தலுக்கான 12 ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலை
யங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையுடன் நாடு முழுவதும் 71 வாக்கெண்ணும்
மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 5 மாதங்களின் பின்னர் பொதுத் தேர்தல்
நடைபெறுவது இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக
மாறியுள்ளது. வழமையாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 10 முதல் 14
நாட்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்பட வேண்டும் என்பதுடன், வேட்பும
னுக்கள் கோரப்பட்டு ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் பொதுத் தேர்தல்
நடைபெற வேண்டும். எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால்
கடந்த மார்ச் முதலாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த போதிலும்
திடீரென நாட்டில் கொரோனா வைரஸ் பரவலுக்கு முகங்கொடுக்க நேரிட்ட
தால் ஐந்து மாதங்களின் பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது.
இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகின்ற நாளாக ஓகஸ்ட் 05 ஆம்
திகதி மாறியுள்ளது. அன்றைய தினம் வாக்களிப்பு முடிவடைந்ததும் மறுநாள்
06 ஆம் திகதி காலை 8 மணி முதலே வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும்.
தேர்தலின் முதலாவது முடிவு மாலை 06 மணியளவில் அறிவிக்க முடியுமென
தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அன்று நள்ளிரவுக்குள் நாட்டை
ஆளப்போவது யாரென்பது தெரியவரும். வேட்பாளர்கள் பெற்றுக்கொள்ளும்
விருப்பு வாக்குகள் 07 ஆம் திகதியே வெளியிடப்படவுள்ளன.

அடுத்தவார இறுதியில் புதிய அமைச்சரவையும் பதவியேற்கும் எனத் தெரியவ
ருவதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் வர்த்தமானி வெளியானதும் 20ஆம்
திகதிக்கு முன்னர் 09ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்கான
அதிவிசேட வர்த்தமானியையும் ஜனாதிபதி வெளியிடுவார் எனவும் அறியமுடி
கின்றது. கபே, பவ்ரல் உட்பட பல உள்நாட்டு, சர்வதேச கண்காணிப்பு
அமைப்புகளும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன. (அ22)

## புதினம் ? தெரியுமோ

**மறுத்திருந்தனர். அப்படி எந்தப் பிரச்சினை
யும் எங்களுக்குள் இல்லை என்று
சொன்னதோடு, தளபதி பட மம்முட்டி–
ரஜினி போல தாங்கள் நட்பாக இருப்பதாக
வும் காட்டிக்கொள்ள முற்பட்டனர். ஆனால்
எத்தனை நாளைக்குத்தான் இருப்பதை
இல்லாதது போல காட்டிக் கொள்ளமுடியும்,
தேர்தல் பரப்புரைகள் நேற்றிரவு முடிந்த
கையோடு, ஏலவே சொல்லப்பட்ட தேசி
யத்தை மையமாகக் கொண்ட கட்சியைச்
சேர்ந்த இரு இளைய வேட்பாளர்களும் திரு
நெல்வேலியில் உள்ள விருந்தகம் ஒன்றில்
ஆதரவாளர்கள் புடைசூழ, வந்திறங்கினர்.
சகலவகையான பானங்கள், உணவு வகை
கள் என தடல்புடலான விருந்து. கொஞ்ச
நேரத்தில் இரு தரப்பும் பரஸ்பரம் உரையாட
முற்பட்டு, மெல்ல மெல்ல வார்த்தைகள்
முற்றின. ஒருகட்டத்தில் இருபக்க
ஆதரவாளர்களும், எங்கே இருக்கிறோம்
என்பதையும் மறந்து , ஆளை ஆள் தாக்க
முற்பட்டனர். உடனேயே சுதாகரித்துக்
கொண்ட விருந்தகத்தின் நிர்வாகம், இரு
தரப்பையும் தனித் தனி இடங்களில் உட்கார
வைத்த பின்னர் தான் கொஞ்சம் இயல்
புநிலை திரும்பியது. ம்ம்ம். அண்ணன் தம்பி
மாதிரி ஒரே கட்சிக்க இருக்கிற மாதிரி
காட்டிக் கொண்டாலும், வாக்கு எண்டு
வந்திட்டா வாய்க்கால் சண்டைதான்.**

**பட்சி**

# வவுனியாவில்...

கிளிநொச்சியிலிருந்து வவுனியா
நோக்கி மோட்டார்சைக்கிளில்
பயணித்துக்கொண்டிருந்த
முதியவரும்,அவரதுமகனும் ,
ஓமந்தைப்பகுதியில் சென்று
கொண்டிருந்தனர். அப்போது
வீதியின் நடுவே திடீரென மாடு
குறுக்கிட்டதால், வேகக்கட்டுப்
பாட்டை இழந்த மோட்டார்
சைக்கிள் விபத்துக்குள்ளானது.
விபத்தில் மோட்டார்சைக்கி
ளில் பயணித்த முதியவர்
படுகாயமடைந்தநிலையில்
வவுனியா வைத்தியசாலையில்
அனுமதிக்கப்பட்டிருந்தார்.
எனினும் நேற்றையதினம்
சிகிச்சை பயனின்றி அவர் சாவ
டைந்துள்ளார். விபத்து
தொடர்பாக ஓமந்தைப் பொலி
ஸார் விசாரணைகளை முன்னெ
டுத்து வருகின்றனர். (அ-110)

# முழுமையான...

கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால் பாதிக்
கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு
தேசிய தொற்று நோய் வைத்தியசாலை இயங்கி
வருகின்றது.எனினும் எதிர்காலத்திலும் இவ்வா
றான தொற்று நோய்களை எதிர்கொள்வதற்கு
முழுமையானதொரு தனிமைப்படுத்தல் மையத்
தின் தேவை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.
அதாவது சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை
மேலும் வலுப்படுத்தும் திட்டம், முழுமையான
தனிமைப்படுத்தல் மையம் ஆகியவை தொற்று
நோயை எதிர்கொள்வதற்கு மிகவும்
முக்கியமானதாக அமையும். இந்தத் திட்டத்துக்குத்
தேவையான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்
டுள்ளது" என அவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## முறைப்பாடுகள்...

மாவட்ட தேர்தல்
முறைப்பாட்டு முகா
மைத்துவ மத்திய நிலை
யத்துக்கு 5 ஆயிரத்து 355
முறைப்பாடு களும்
கிடைத்துள்ளன.
இம்முறை உயிராபத்தை
ஏற்படுத்தும் வன்முறைச்
சம்பவங்கள் எதுவும்
பதிவாகவில்லை என்று
தேர்தல்கள் ஆணைக்குழு
மேலும் தெரிவித்துள்
ளது. (அ 22)

# சுதந்திரமான தேர்தலுக்கு...

கோரிக்கை விடுத்
துள்ளார்.தேர்தல்
தொடர்பான
மோசடிகள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது
கட்சி, தராதரம் பாராது தேர்தல் சட்டத்தின் கீழ் கடும்
நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை
விடுத்துள்ளார். முகக்கவசம், ஒரு மீற்றர் இடைவெளியை
கட்டாயம் பேணி வாக்குச் சாவடிகளில் சுகாதார வழி
காட்டல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் எனவும்
அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"வாக்குச் சாவடிகளில் கொரோனா வைரஸ் பரவலுக்கு
எவ்வித வாய்ப்பும் இல்லை. வாக்குச் சாவடிகளுக்குள்
தொற்றுடன் வரவோ அல்லது வைரஸ் தொற்றுடன்
வெளியேறவோ எவ்வித வாய்ப்புகளும் இல்லை.
வாக்குச் சாடவடிகளுக்கு வரும் அனைவரும் கட்டாயம்
முகக்கவசங்களை அணிந்திருக்க வேண்டும். கைகளையும்
கழுவிக்கொண்டு வரவேண்டும். வாக்குச் சாவடியில்
முதலாவதாகவுள்ள அதிகாரிக்கு முகக்கசவங்களை
கீழிறக்கி வாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்ப
டுத்த முகத்தைக் காட்ட வேண்டும். பின்னர் மீண்டும்
கைகளைக் கழுவ வேண்டும்.

அதன் பின்னர் கை விரலை மடித்து மை பூசிக்கொள்ள
வேண்டும். ஒருமுறை மாத்திரமே மை பூசும் பேனை
பயன்படுத்தப்படுத்தப்படும் என்பதால் எந்தவொரு
சந்தர்ப்பத்திலும் கொரோனா வைரஸ் பரவலுக்கு
வாய்ப்பு இல்லை. அதனால் வாக்காளர்களை அச்சமின்றி
வாக்குச் சாவடிகளுக்கு வருமாறு கோரிக்கை
விடுக்கின்றேன்.

முடிந்தால் கறுப்பு அல்லது நீளப் பேனையை கொண்டு
வாருங்கள். இல்லாவிட்டால் நாம் தொற்று நீக்கப்படும்
பேனைகளை வழங்குவோம்." - என்றார். (அ-22)

# கொரோனாத் தடுப்பூசி பரிசோதனை நிறைவு ஒக்டோபரில் மனிதர்களுக்கு செலுத்துவோம்

## ரஷ்யா அதிரடி அறிவிப்பு





மொஸ்கோ, ஒக.3

கொரோனாத் தொற்றுக்கான தடுப் பூசி பரிசோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம்.

அதனை ஒக்ரோபரில் மனிதர்களுக்கு செலுத்த உள்ளோம் என்று ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சர் மிகைல் முராஷ்கோ அறிவித்துள்ளார். ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:

கமலேயா நிறுவனம் உருவாக்கியுள்ள தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்திப் பார்க்கும் பரிசோதனைகள் நிறைவு அடைந்து விட்டன. அடுத்து பதிவு செய்வதற்கான ஆவண வேலைகள் நடந்து வருகின்றன. ஒக்ரோபர் மாதம் தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு செலுத்தவுள்ளோம்.

கொரோனாவுக்கு புதிய சிகிச்சை முறையை படிப்படியாகத் தொடங்க வேண்டும் என்பதால் தடுப்பூசியை ஒக்டோபரில் போடத் திட்டமிடுகின்றோம்.

கொரோனாத் தடுப்பூசி முதலில் மருத்துவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார். அதேவேளை ரஷ்யாவின் கொரோனாத் தடுப்பூசிக்கு, அந் நாட்டு மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு இந்த மாதம் ஒப்புதல் வழங்கும் எனத் தகவல் வெளியாகியுள்ளது என்று ரொய்டேர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகின் வல்லரசு நாடுகள் பலவும் கொரோனாத் தடுப்பு மருந்து தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் நிலையில் ரஷ்யாவின் இந்த அறிவிப்பு ஏனைய நாடுகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. (ரி1)

## மீண்டும் இணையும் தனுஷ்- ஹன்சிகா



நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 'மஹா' என்ற படத்தில் நடித்து வருகிறார் ஹன்சிகா. உடல் எடையைக் குறைத்து இப்படத்துக்காக புதிய தோற்றத்துக்கு மாறியுள்ளார். இப்படத்தில் சிம்புவும் சிறப்புத் தோற்றத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தைத் தொடர்ந்து தனுஷ் ஜோடியாக ஹன்சிகா நடிக்க இருக்கிறார். மித்ரன் ஜவஹர் இயக்குகிறார். கடந்த சில மாதங்களுக்கு முன்னரே இந்தப் படம் பற்றிய அறிவிப்பு வெளியாகி விட்டது. இந்தப் படத்தில் தனுஷுக்கு இரண்டு நாயகிகள் என்றும், அதில் ஒருவராக ஹன்சிகா ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கனவே தனுஷுடன் 'மாப்பிள்ளை' என்ற படத்தில் ஹன்சிகா நடித்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பின் தற்போது மீண்டும் தனுஷுடன் ஹன்சிகா ஜோடி சேருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தாண்டவம்
## ஆஸியின் விக்டோரியா பேரழிவுப் பகுதியாக அறிவிப்பு

கன்பரா, ஒக.3

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் கொரோனா பாதிப்பு மிக மோசமான நிலையில் உச்சம் பெற்றதை அடுத்து பேரழிவுப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான ஊரடங்கு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அரசு தரப்பு தெரிவித்துள்ளது. புதிய கட்டுப்பாடுகளின் அடிப்படையில் தலைநகர் மெல்போர்னில் இரவு நேர ஊரடங்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், குடியிருப்பை விட்டு வெளியேற வேண்டாம் என்ற உத்தரவு மேம்படுத்தப்படும் எனவும், வீட்டை விட்டு வெளியேறுவதற்கு குடியிருப்பாளர்களுக்கு குறைந்த விலக்குகளை அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஞாயிறு, விக்டோரியா மாகாணத்தில் 671 புதிய கொரோனா வைரஸ் பாதிப்புகள் மற்றும் 7 இறப்புகள் பதிவாகியுள்ளன. இதனை அடுத்து மாகாணத்தில் மொத்தம் 11,557 நோய்த் தொற்றுகள் மற்றும் 123 இறப்புகள் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ரி1)





## கொரோனாவிலிருந்து குணமடைந்தார் அமிதாப் பச்சன்



கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நடிகர் அமிதாப்பச்சன் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

பிரபல பொலிவுட் நடிகர்களான அமி தாப் பச்சனுக்கும், அவரது மகன் அபிஷேக் பச்சன், மருமகள் ஐஸ்வர்யா மற்றும் பேர்த்தி ஆராதனா ஆகியோருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவர்கள் மும்பை நானாவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்கள்.

இந்திய அளவில் பல்வேறு மொழி படங்களில் நடித்து அசத்திய அமிதாப் பச்சனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அறிந்த பலரும், அவர் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப பிரார்த்தனை செய்து வந்தனர்.

இந்த நிலையில் அமிதாப் பச்சன் கொரோனாவில் இருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளார் என அவரது மகன் அபிஷேக் பச்சன் தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்து வீறுநடை

# அயர்லாந்தை வீழ்த்தி தொடரை தனதாக்கியது



லண்டன், ஓக.2

அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்திலும் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி தொடரைத் தனதாக்கிக் கொண்டது. மூன்று ஆட்டங்கள் கொண்ட இந்தத் தொடரில் இங்கிலாந்து 2:0 என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது.

இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்று இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் மைதானத்தில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பில் கேம்பர் 68 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். இவர் முதலாவது ஒருநாள் தொடரிலும் அரைச்சதம் கடந்திருந்தார்.

இங்கிலாந்து அணி சார்பாகப் பந்துவீச்சில் அடில் ரஷித் 3 இலக்குகளையும், டேவிட் வில்லே, சகீப் மக்மூத் ஆகியோர் தலா 2 இலக்குககளையும், ஜேம்ஸ் வின்ஸ், ரீஸ் டாப்ளே ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

212 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 32.5 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை மட்டும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இங்கிலாந்தின் பேர்ஸ்டோவ் 14 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 41 பந்துகளில் 82 ஓட்டங்கள் விளாசி அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றார். டேவிட் வில்லே 47 ஓட்டங்களும், சாம் பில்லிங்ஸ் 46 ஓட்டங்களும் எடுத்தனர்.

அயர்லாந்து அணி சார்பாகப் பந்துவீச்சில் லிட்டில் 3 இலக்குகளையும், கேம்பர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஒரு நாள் தொடரின் 3 ஆவதும், இறுதியுமான ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. (ரி2)

## உங்கள் தெரிவு...

தமிழரசுக் கட்சியாக (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இருக்க வேண்டும். உங்கள் சின்னம் 'வீடு' சின்னமாக இருக்கவேண்டும். இந்த வரலாற்றுக் கடமையை நீங்கள் அனைவரும் தவறாது செய்ய வேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

"எம்மை நாமே ஆளுகின்ற வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் ஆணித்தரமாக எடுத்துரைக்க நாம் ஓரணியில் பலமாக இருக்க வேண்டும். இதை நிரூபிப்பதற்கான ஆணையை எதிர்வரும் 5ஆம் திகதி உங்கள் பொன்னான வாக்குகளினால் 'வீடு' சின்னத்துக்கு வழங்குங்கள்" எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

பெருந்திரளான மக்களின் பங்களிப்புடன் திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோயில் முன்றலில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

"தமிழர்களை எவரும் அச்சுறுத்த முடியாது. மிரட்ட முடியாது. சர்வதேச சமூகமும் தமிழர்களின் பின்னால்தான் நிற்கின்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் எங்கள் பின்னால்தான் நிற்கின்றார்.

புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான, சமத்துவமான, கௌரவத்துடன் கூடிய தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரில் வலியுறுத்தியுள்ளார்.

ஒற்றையாட்சி முறையானது பல இனங்கள் இணைந்து வாழ்கின்ற நாட்டுக்கு உகந்த முறை அல்ல. இந்த முறை மாற்றி அமைக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் தமது இறைமையின் அடிப்படையில் தம்மை தாமே ஆளுகின்ற வண்ணம் சட்ட திட்டங்கள் அமைய வேண்டும்.

தமிழ் மக்கள் அநீதியாக ஒன்றும் கேட்கவில்லை. ஒருமித்த நாட்டுக்குள் ஜனநாயகத்தின் அடிப்படையில் எமது தீர்வையே வலியுறுத்தி வருகின்றோம். நாங்கள் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கேட்கவில்லை.

அன்றும் பெரும்பான்மை இனத்தோடு ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றே எமது மக்கள் விரும்பினார்கள். ஆனால், எல்லா விடயங்களிலும் நாம் திட்டமிட்டு பலவீனப்படுத்தப்பட்டோம். பொலிஸ், காணி, அபிவிருத்தி, கல்வி, தொழில் வாய்ப்பு போன்ற துறைகளில் அநீதி இழைக்கப்பட்டது. எனவேதான் எமது அதிகாரத்தை எமது இறைமையின் அடிப்படையில் வழங்குமாறு வலியுறுத்தி வருகின்றோம். எம்மில் எந்த ஒரு தளர்வும் இல்லை என்பதை இலங்கை அரசுக்கும் சர்தேச சமூகத்துக்கும் உணர்த்த வேண்டும்.

எனவே, எதிர்வரும் 5ஆம் திகதி தமிழர்கள் அனைவரும் ஒருமித்து ஒற்றுமையாக ஒரே அணியில் வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு நாம் வாக்களிப்போமானால் திருகோணமலையில் இரண்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை நாம் பெற முடியும். இரண்டு தடவைகள் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. எனவே, சிந்தித்து வாக்களியுங்கள்" என்றார். (அ-22)

## வர்ணனையாளர் பதவிக்காக காத்திருக்கும் மஞ்ச்ரேக்கர்!



புதுடில்லி, ஓக.2

தொலைக்காட்சி வர்ணனையாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்ச்ரேக்கர் தன்னை மீண்டும் வர்ணனையாளர் குழுவில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் வர்ணணையாளர் குழுவில் இருந்த இவர், சர்ச்சைகள் காரணமாகக் கடந்த மார்ச் மாதம் நடந்த இந்திய - தென்னாபிரிக்கத் தொடருக்கு முன்னர் அதிலிருந்து நீக்கப்பட்டார்.

ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கவுள்ள நிலையில், தன்னை மீண்டும் வர்ணைனையாளர் குழுவில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று மஞ்ச்ரேக்கர், இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சௌரவ் கங்குலியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கங்குலிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், "நான் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விதிகளுக்கமைய நடந்துகொள்வேன். இனி ஒருபோதும் விதிகளை மீற மாட்டேன். மீண்டும் என்னை வர்ணணையாளர் குழுவில் இணைத்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். தங்கள் பதி லுக்காகக் காத்திருக்கின்றேன்" என்று தெரிவித்துள்ளார். (ரி2)





## சமூக இடைவெளியைபேண மனித பொம்மைகளை பயன்படுத்தும் உணவு விடுதி

ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள உணவு விடுதியொன்று வாடிக்கையாளர்கள் மத்தியில் சமூக இடைவெளியை பேணச் செய்வதற்காக மனித பொம்மைகளைப் பயன்படுத்துகின்றனர்.

மசாட்டோ டேக்மைன் என்பவர் நடத்தும் சீன உணவு விடுதியிலுள்ள கதிரைகளில் இடையிடையே 16 மனித பொம்மைகள் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் வாடிக்கையாளர்கள் மத்தியில் சமூக இடைவெளி பேணப்படுகிறது. ஆண்கள், பெண்கள் சிறார்களின் தோற்றத்தில் இந்த பொம்மைகள் உள்ளன.



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 03.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.